**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.195** **நாள் : 30.07.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நாளை (31.07.2025) 5 வார்டுகளில் நடைபெறவுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நாளை (31.07.2025) மணலி மண்டலம், வார்டு-17ல் கொசப்பூர், சென்னை நடுநிலைப்பள்ளி அருகிலுள்ள உடற்பயிற்சிக் கூடம், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-46ல் எஸ்.எம்.நகர் பிரதான சாலை, சி. கல்யாணபுரம் சென்னை மேல்நிலைப்பள்ளி, அம்பத்தூர் மண்டலம், வார்டு-83ல் கொரட்டூர், ஸ்ரீரங்கா மஹால், வளசரவாக்கம் மண்டலம், வார்டு-151ல் ஆற்காடு சாலையில் உள்ள கிருஷ்ணவேணி திருமண மண்டபம், பெருங்குடி மண்டலம், வார்டு-183ல் பாலவாக்கம், கிழக்குக் கடற்கரை சாலையில் உள்ள கமர் குடியிருப்பு ஆகிய 5 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**